நாவலர் மன்றமும் மூடப்படுமா?

309.P/050

309.P

0 75 0

29-7-71 மாலை 4 மணிக்கு ஷெ வருடாந்தக் கூட்டம் நாவலர் மன்ற அலுவலகத்தில் நடைபெறும் — அனைவரையும் சமூகமளிக்கும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

பிரசுரம் - 1

# நாவலர் மன்றமும் மூடப்படுமா?

## நல்லவர்கள் வாழும்வரை நாவலர் மன்றமும் வாழட்டும்.

## தமிழ் மாணவர்கட்கு வரஇருக்கும் பேரிடி.

இலங்கைவாழ் மக்களிடையே இன்றெழுந்துள்ள விழிப்பு மிகவும் மெச்சக்கூடியது! புதுமையானது! பலதுறைகளிலும் முன்னேக்கிய வண்ணம் சென்று கொண்டிருக்கின்றனர். இந்த அதியற்புத வளர்ச்சி பெரும்பான்மை மக்களிடமே! இன்பத்தமிழ் பேசும் இலங்கைத் தமிழரிடை ஐக்கியம், பொதுநலம் பேணுதல், முதலிய நல்ல அம்சங்கள் முளையிலேயே கருகிவிட்டதா? என்று கேட்கத் தோன்றுகின்றது!

மாணவர்கள் பெருக்கத்தினுல் கல்லூரிகளில் இடம் போதாமையினுல், அவர்களுக்குப்படிக்க வசதிகள் இல்லாது வருந்துகின்றுர்கள். எல்லாச் செல்வத்திலும் கல்விச் செல்வம் மேம்பாடுடைத்தன்றே! எல்லாத்தானத்திலும் வித்தியாதானம் மேம்பாடுடைத்தன்றே! கல்வியே கருந்தனம் என்றல்லவா? கருதப்படுகின்றது! தனவந்தர்கள், கல்விச்சீமான்கள், அறிவாளிகள், தேசியவாதிகள் சமயவாதிகள் யாவரும் எங்கள் கழகத்தில் இருந்தும், கொழும்பில் நடுத்தர வகுப்பிலுள்ள தமிழ் மக்களின் பிள்ளைகள் (வயதுவந்தோர்) முட்டின்றிப்படிக்க, ஒரு கல்லூரி வேண்டுமே என்று துடிக்கும் போதுதான் நாவலர் மன்றம் உதயமாயிற்று! ஆம்! நாவலர் மன்றம் தோன்றியதிலிருந்து நாலாபக்கமும் நல்ல மாணவர்கள் பலர் சேர்ந்து உயர்தர வகுப்புகளில் பயின்று, பொறியியல் (*Engineering*) மருத்துவ இயல் (*Medicine*) துறைகளில் முன்னேறி வாழ்க்கையின் உயர்கட்டத்தில் இருக்கின்றுர்கள்.

இந்த நாவலர் மன்றம் இதுவரை காலமும் தமிழர்கள் அதிகமாக வாழும் வெள்ளவத்தையிலுள்ள அலெக்சான்ரு வீதியிலுள்ள 33-ம் இலக்க இல்லத்தில் நடை பெற்று வந்தது. இக்கட்டடத்தை நாவலர் மன்ற நிர்வாகிகளைக் கையேற்று நடத்தும் வண்ணம் கட்டடச் சொந்தக்காரர்கள் பன்முறை வேண்டியுள்ளனர். 1956-ம் ஆண்டு தொடக்கம் நாவலர் மன்றம் தனக்கெனச் சொந்தமாக ஒரு ஸ்தாபனத்தை ஆக்கிக்கொள்ளத் தவறி விட்டது. இம் மன்றத்தை மூடவிட்டால் திரும்பப்பெற முடியாது. தனக்கென வாழாப் பிறக்குரியாளரும் தமிழ்மக்களின் காவலனுமான மதிப்புக்குரிய ஒரு பெரியாரின் அயரா உழைப்பினால் எம் சகோதர கலாசாலை (அக்குவினுல்)யின் சம அந்தஸ்துக்கு இதனையும் பதிவு செய்து உதவியுள்ளார். வருங்காலச் சந்ததியின் வசவுக்கு ஆளாகாமல் வளர்ந்து வரும் சமுதாயத்துக்குச் சாவுமணி அடிக்காமல், தமிழ் மாணவர்களுடைய நலன்களை முன்னிட்டு, தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக இன்று வாழும் நாமனைவரும் அடம்பன் கொடி போல் கூடி, ஷெ மன்றம் நடந்துவந்த கட்டடத்தை அதற்குரிய கிரயத்தை உவந்து அளித்து எமக்காக்கிக் கொள்ளுதல் மிகவும் அவசியமும் செய்ய வேண்டியதுமாகும். இன்றே செய்ய வேண்டும்! இன்னல்கஊ சூழமுன், இடர்கள் வந்து இளவல்களை இடறமுன் இன்றே செய்ய வேண்டும்! எமது தலையாய கடமை தவறினல் இது பெரும் அறியாமை!

ஷெ மன்றத்தின் நிர்வாகிகள் இம்மாசக்கடைசியளவில் வருடாந்தக் கூட்டம் கூட உள்ளார்கள்! மூடுவிழா எடுக்காமல், மூலதனத்தை முயற்சி செய்து பெருக்கி, நாவலர் மன்றக் கட்டடத்தை விலை கொடுத்து வாங்க யாவரும் முன்வரவேண்டும் என தமிழத்தாயின் பெயரினல், வேண்டுகின்றோம்!

நாவலர் மன்றம் இயங்கிவரும் கட்டடத்தின் உரிமையாளர் கட்டடத்தை வாங்கும்படி கோரியுள்ளார். ஆகவே இத்தொகையைத் திரட்டித்தாருங்கள் என்று பெற்றோர்களாகிய உங்களையும், கல்விமான்களையும், வணிகப் பெருமக்களையும் கேட்டுக் கொள்ளுகின்றோம்

மேலும் உங்கள் வசதிகளுக்கமைய மாசம் மாசம் அல்லது வருடா வருடம் நன்கொடையாகச் சிறிய தொகை யாகவோ, ஓரேமுறையில் பெரிய தொகையாகவோ தந்து உதவும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்! (இதற்குக் கொடுக்கும் நன்கொடைப்பணம் வருமானவரி விதி விலக்குடையது.)

சிறுதுள்ளி பெருவெள்ளம்: நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர்; என்று இருகையாலும் கூப்பி வேண்டுகின்றோம்!

இது சம்பந்தமாக உங்கள் நல்ல கருத்துக்களை, ஷெ மன்றத்தின் கெளரவ காரியதரிசி, இலக்கம் 33, அலெக்சான்ரு வீதி, வெள்ளவத்தை என்ற விலாசத்துக்கு எழுதி இன்றே அனுப்புங்கள்!

இங்ஙனம்

இன்னலுறும் மாணவன்

---

நியூ லீலா, கொழும்பு-12.